டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 29.10.2024 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 111 - Madurai | Online Edition

# அரிசி ஆலை உரிமையாளர்களுக்கான குறை தீர்க்கும் அமைப்பு

## மத்திய அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி தொடங்கி வைத்தார்

புது தில்லி, அக்.28

அரிசி ஆலை உரிமையாளர்களுக்காக இந்திய உணவுக் கழகத்தின் குறை தீர்க்கும் அமைப்பின் கைபேசி செயலியை மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு, பொது விநியோகத் துறை, அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி புதுதில்லியில் நேற்று (28.10.24) தொடங்கி வைத்தார். வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை, சம்பந்தப்பட்ட தரப்பினரின் திருப்தி ஆகியவற்றுக்காக மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். இந்த கைபேசி செயலி அரிசி ஆலை உரிமையாளர்கள் இந்திய உணவுக் கழகத்திடம் தங்கள் குறைகளை வெளிப்படையாக எடுத்துரைத்து, தீர்வைக் காண உதவும். இந்த செயலி, நல்ல நிர்வாகத்திற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான அரசின் தொடர்ச்சி யான முயற்சிகளின் ஒரு பகுதியாகும். இந்த செயலியை ஆண்ட் ராய்டு பயனர்கள் கூகுள் பிளே ஸ்டோரில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த செயலியில் அரிசி ஆலை உரிமையாளர்கள் புகார்களை பதிவு செய்து அதன் நிலையைக் கண்காணிக்க முடியும். செயலியின் முக்கிய அம்சங்கள் வருமாறு, ஆலை உரிமை யாளர்கள் தங்கள் குறைகளை எளிதாக தங்கள் மொபைலிலேயே பதிவு செய்யலாம். இது எஃப்.சி.ஐ உடனான தகவல் தொடர்புகளை எளிதாக்குகிறது.

இந்த செயலி செய்யப்பட்டுள்ள புகார் நிலை குறித்து அவ்வப்போது புதுப்பிக்கப்பட்ட தகவல்களை வழங்குகிறது. ஆலை உரிமையாளர்களுக்கு தகவல் அளித்து வெளிப்படைத் தன்மையை உறுதி செய்கிறது.

மேம்படுத்தப்பட்ட சேவைத் தரத்துடன் கொள்முதல் நடவடிக்கை களை எளிதாக்குவதில் இந்திய உணவுக் கழகத்தின் உறுதிப்பாட்டில் இது மற்றொரு மைல்கல்லைக் குறிக்கிறது.

# இயற்கை இடுபொருட்களை சந்தைப்படுத்த ஓர் வாய்ப்பு

திருச்சி, அக்.28

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இயற்கை விவசாயத்தில் ஈடுபடுபவர்கள், இயற்கை இடு பொருட்களை தயாரிப்பவர்க மற்றும் சந்தைப்படுத்துபவர்களை ஒருங்கிணைத்து இயற்கை வேளாண்மை கருத்தரங்கு மற்றும் கண்காட்சி ஒவ்வொரு மாதமும் முதல் வாரம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டு வருகிறது.

இதன் முதல் நிகழ்ச்சியானது, அக்டோபர் முதல் செவ்வாய்க் கிழமையான 1.10.24 அன்று நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, இரண்டாம் நிகழ்ச்சி நவம்பர் முதல் செவ்வாய்க்கிழமை 5.11.24 அன்று நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கில் இயற்கை வேளாண்மை, இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல், சத்துமிகு காய்கறி தோட்டம், இயற்கை பொருட்களை சந்தைப்படுத்துதல் போன்ற தலைப்பு களின் கீழ் தொழில்நுட்ப வல்லுநர்களால் விவசாயிகளுக்கு எடுத் துரைக்கப்பட உள்ளது. மேலும் இயற்கை இடுபொருள்களை சந்தைப்படுத்துவதற்கும், அவற்றை விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கச் செய்யும் வகையிலும் இயற்கை இடுபொருட்கள் உற்பத்தி செய்பவர்கள் மூலம் கண்காட்சி அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு இயற்கை இடுபொருட்களை வாங்குவதற் கான வாய்ப்பினை எளிதாக்குவதோடு இடுபொருட்களை விவசாயி களிடம் சந்தைப்படுத்துவதில் பெரிதும் உதவுகிறது. ஆர்வமுள்ள இயற்கை விவசாயிகள், இயற்கை இடுபொருள்கள் தயாரிப்போர் மற்றும் சந்தைப்படுத்துவோர் இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்று பயன டையுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தொழில் நுட்பங்கள் மற்றும் இடு பொருட்கள் பற்றிய தகவல்களை தெரிந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் விவரங்களுக்கு 0431 2962854, 91717 17832 என்ற எண்ணை அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வறை) தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யவும். மேற்கண்ட தகவல்களை சிறுக மணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜா பாபு தெரிவித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# ஆனைக் கொம்பன் ஈ தாக்குதலைக் கட்டுப்படுத்திட வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை



புதுக்கோட்டை, அக்.29

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் சம்பா நெற்பயிரினை தாக்கும் ஆனைக் கொம்பன் ஈயினை கட்டுப்படுத்திட வேளாண்மை இணை இயக்குநர் (பொ), வி.எம்.ரவிச் சந்திரன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தற்போது நிலவும் தட்பவெப்ப நிலையால் புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்துள்ள நெற்பயிரில் ஆனைக்கொம்பன் ஈ தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனைக் கொம்பன் பூச்சியானது நெற்பயிரின் தூர்களின் குருத்து பகுதியை தாக்குவதால் பாதிக்கப் பட்ட இலையானது வெங்காய இலை போன்று மாறிவிடும். ஈ வகையை சேர்ந்த இந்த பூச்சியானது மஞ்சள் கலந்த பழுப்பு அல்லது இளஞ்சிவப்பு நிறமாகவும், கொசுவை போல் சிறியதாகவும், நீண்ட மெல்லிய கால்களுடன் இருக்கும். இதனுடைய புழுப்பருவம் பயிர்களை தாக்குவதனால் தூர்களுக்கு பதிலாக கொம்பு போன்ற கிளைப்புகள் தோன்றும். இந்த கிளைப்புகள் வெண்மையாகவோ அல்லது இளஞ்சிவப்பு நிறமாகவோ குழல் போன்று வெங்காய இலையைப் போல காணப்படும். இதை பார்ப்பதற்கு யானையின் கொம்பை போல் இருப்பதனால் இது ஆனைக் கொம்பன் என்று அழைக்கப்படுகிறது. தாய்ப்பூச்சி யானது நீளமான உருளை வடிவிலான பளப்பளப்பான முட்டைகளை இலையின் அடிப்பகுதியில் இடும். இதிலிருந்து வெளியாகும் புழுக்கள் நெற்பயிரின் குருத்துக் களை துளைத்து குழல்களாக மாற்றி விடும். இதனால் பயிரில் நெற்கதிர்கள் உருவாகாமல் விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்படும். நெல் நடவு செய்த 35 முதல் 45 நாட்களில் தான் இந்த புழுக்களின் தாக்குதல் அதிகம் காணப்படும்.



எனவே, வயல்களை களைகள் இல்லாமல் தூய்மையாக வைத்திருப்பதனாலும், புற ஊதா விளக்குபொறிகளை வைத்தும், ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். தழைச்சத்து உரங்களை பரிந் துரைக்கப்பட்ட அளவில் பயன்படுத்தினால் இதன் தாக்குதலில்

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.



இருந்து நெற்பயிர்களை பாதுகாக்கலாம். மேலும், இப்பூச்சியின் தாக்குதல் பொருளாதார சேத நிலை அளவை (அதாவது 10 இலைக்கு ஒரு இலை வெங்காயத்தாள்) விட பாதிப்பு அதிகமாகும் போது மகசூல் இழப்பு ஏற்படும். இதனை கட்டுப்படுத்த பூச்சிக் கொல்லி மருந்துகளான கார்போசல்பான் 25 சத ஈ.சி – 300 மிலி அல்லது பிப்ரோனில் 5 சத எஸ்.சி – 400 மி.லி ஆகிய மருந்து களில் ஏதேனும் ஒன்றை ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் கொண்டு தெளித்து கட்டுப் படுத்திடலாம். இதன் மூலம் விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது. மேலும் தாக்குதல் தென்பட்டால் கூடுதல் விபரங்களுக்கு உடனடியாக அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தினை அணுகிட கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம்.ரவிச்சந்திரன் ஆலோசனை தெரிவித்து உள்ளார்.



# நடப்பு ராபி பருவத்திற்கு தேவையான 11873 மெ.டன் உரங்கள் கையிருப்பு

கோயம்புத்தூர், அக்.28

கோவை மாவட்டத்தில் பருவமழை காலத்தில் விவசாயிகளுக்கு உரங்கள் தடையின்றி கிடைக்கும் வகையில் 11873 மெ.டன் உரம் கூட்டுறவு மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் உரம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என வேளாண்மை இணை இயக்குநர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டத்தில் கடந்த ஒரு மாதமாக பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் விவசாயிகள் ராபி பருவ சாகுபடிப்பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். தற்போது 1.12 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் தென்னை, சோளம், மக்காச்சோளம், பழம் மற்றும் காய்கறிப் பயிர்கள் சாகுபடி மேற்கொண்டு வருகின்றனர். சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர் களுக்கு தேவையான இரசயான உரங்களான யூரியா 2523 மெ.டன், டிஏபி 1409 மெ.டன், பொட்டாஷ் 1780 மெ.டன், காம்ப்ளக்ஸ் 4381 மெ.டன், சூப்பர் பாஸ்பேட் 1671 மெ.டன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

உர மூட்டையில் குறிப்பிட்டுள்ள எம்.ஆர்.பி விலையை தாண்டி உரம் விற்பனை செய்தல், விற்பனை உரிமங்களில் இணைக் கப்படாத உரங்களை இருப்பில் வைத்து விற்பனை செய்தல், மற்றும் இணைப்பொருட்களை கட்டாயப்படுத்தி விவசாயி களுக்கு விற்பனை செய்வது, ஆகியவை கண்டறியப்பட்டால் உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985 ன்படி நடவடிக்கை எடுக்கப் படும் என தெரிவித்தார்.

மேலும் உரம் தொடர்பான புகார்களுக்கு வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்மை இணை இயக்குநர் (பொ) தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 28.10.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 35 | 38 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 40 | 57 | உருளை (பிற) | 40 | 44 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 48 | 57A | உருளை(ஊட்டி) | 48 | 52 |
| 2 | வெண்டை | 40 | 44 | 58 | மேரக்காய் | 25 | 30 |
| 3 | தக்காளி (நாடு) | 32 | 35 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 30 | 33 | 60 | கேரட் | 40 | 46 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 70 | 76 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 46 |
| 6 | புடலை | 38 | 44 | 62 | நூல்கோல் | 35 | 40 |
| 7 | பீர்க்கன் | 35 | 44 | 63 | டர்னிப் | 30 | 34 |
| 8 | சுரைக்காய் | 25 | 34 | 64 | மு.கோஸ் | 20 | 25 |
| 9 | பாகற்காய் | 40 | 46 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 35 | 40 | 66 | காளிபிளவர் | 40 | 45 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 0 | 0 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 260 | 310 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 40 | 69 | இஞ்சி | 60 | 145 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 35 | 40 | 70 | புருக்கோலின் | 110 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 54 | 60 | 71 | பென்னி பீன்ஸ் | 100 | 110 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பழையது) | 55 | 59 | 72 | குடமிளகாய் | 60 | 68 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 40 | 73 | ஊட்டி அவரை | 0 | 0 |
| 18 | பச்சை மொச்சை | 60 | 65 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 45 | 50 | 71A | | | |
| 20 | தேங்காய் | 48 | 52 | | | | |
| 21 | மாங்காய் | 50 | 55 | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 75 | 80 | 75 | எலுமிச்சை | 70 | 80 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 45 | 48 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 60 | 64 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 10 | 12 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் | 100 | 140 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்ச் | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 10 | 12 | 89 | | | |
| 39 | வல்லாரை | 10 | 12 | 90 | கதளி | 50 | 55 |
| 40 | கோவக்காய் | 35 | 38 | 91 | பூவன் | 38 | 42 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 48 | 52 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 40 | 45 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 25 | 28 | 96 | நேந்திரன் | 45 | 48 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 28 | 97 | செவ்வாழை | 75 | 80 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 0 | 0 |
| 50 | நிலக்கடலை | 45 | 50 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 34 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 30 | | | | |

# மலர் சாகுபடியில் இப்கோ நானோ உர மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம்

கிருஷ்ணகிரி, அக்.28

கிருஷ்ணகிரி, அகலக்கோட்டையில் மலர் சாகுபடி விவசாயி களுக்கான நானோ உரங்கள் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், இப்கோ கள அதிகாரி, ஆனந்தன், விவசாயிகளை வரவேற்று பேசினார். அவர் பேசுகையில் ரோஜா சாகுபடியில் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா திரவ உரங்களை தெளிக்கும் முறை மற்றும் நன்மைகள் பற்றி விளக்கினார்.

பின்னர், பச்சைத் துண்டு விவசாயி யூடியூப் சேனல், நிறுவனர், சரத்குமார், ரோஜா சாகுபடியில் நடவு முதல் அறுவடை வரை பின்பற்ற வேண்டிய முறைகள், பூச்சி மற்றும் நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் முறை, பயன்படுத்த வேண்டிய பூச்சிக் கொல்லி மருந்துகள், உரம் பயன்படுத்தும் நேரம் மற்றும் பயன்படுத்தும் அளவு மற்றும் பாசன முறைகள் பற்றி விரிவாக விளக்கினார். மேலும், அவர் மலர் சாகுபடியில் அதிக மகசூல் பெறவும், உரச் செலவை குறைக்கவும் நானோ உரங்களை பயன்படுத்துமாறு வலியுறுத்தினார்.

இப்கோ கள அதிகாரி, சேக் அப்துல்லா, உரச் செலவை குறைத்து துல்லியமான முறையில் உரங்களை தெளிக்க கிசான் ட்ரோன் பயன்படுத்தலாம் என்றும் நானோ உரங்களுடன் பிற வேளாண் பூச்சிக்கொல்லி மருந்துகளும் கலந்து தெளிப்ப தனால் இடுபொருள் செலவு குறையும் என்றும் கூறினார்.

மேலும், நானோ உரங்கள் வாங்கினால் இப்கோவின் விவசாயிகளுக்கான விபத்துக் காப்பீடு திட்டமான சங்கடஹறரன் பீமா யோஜனாவின் மூலம் ரூ.200000 வரை காப்பீடு பெறலாம் என்றார்.

இந்நிகழ்ச்சியில், 200க்கும் மேற்பட்ட மலர் விவசாயிகள் பங்கேற்று பயன் பெற்றனர்.




நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மி.லி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# விருதுநகர் மாவட்டத்தில் உரங்கள் போதிய கையிருப்பு உள்ளது

## வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

விருதுநகர், அக்.28

விருதுநகர் மாவட்டத்தில் நடப்பாண்டில் இதுவரை நெல் 11402 ஹெக்டேர் பரப்பளவில் பயிடப்பட்டுள்ளது. அதுபோல் சிறு தானியங்கள் 23805 ஹெக்டேர் பரப்பளவிலும் பயறுவகை பயிர்கள் 2241 ஹெக்டேர் பரப்பளவிலும் எண்ணெய் வித்து பயிர்கள் 1267 ஹெக்டேர் பரப்பளவிலும், பருத்தி 6294 ஹெக்டேர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் 203 தனியார் உர விற்பனை நிலையங்கள் மற்றும் 179 தொடக்க வேளாண்மை கூட்டுறவு




கடன் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. மாவட்டத்தில் தற்போது யூரியா 3164 டன், டி.ஏ.பி 1144 டன், பொட்டாஷ் 248 டன், காம்ப்ளக்ஸ் உரங்கள் 1969 டன் விவசாயிகளின் தேவைக்காக இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தற்போது வேளாண் விளைப் பொருட்கள் சாகுபடிக்கு தேவையான உரங்கள் போதிய அளவில் இருப்பு உள்ளது.

மேலும், உரம் கிடைப்பதில் பிரச்சனை, இரசீது இல்லாமல் விற்பனை செய்வது, அதிக விலைக்கு விற்பனை செய்வது, பிற உரங்களை வாங்க கட்டாயப்படுத்துவது மற்றும் உரம் பதுக்கல் பற்றிய புகார்களை அந்தந்த பகுதிகளுக்கான வட்டார வேளாண்மை உதவி இயக்குநரிடம் விவசாயிகள் தெரிவிக்கலாம் என விருதுநகர் வேளாண்மை இணை இயக்குநர் தெரிவிக்கிறார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நிறைவான மகசூல் பெற விதைப்பரிசோதனை

விவசாயத்தில் அதிக மகசூல் பெற்று லாபம் பெற தரமான இடுபொருட்களை உபயோகித்தல் அவசியமாகும். இடுபொருட்களில் முக்கியமானதும் முதன்மையானதும் தரமான விதையாகும். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பது பழமொழி. தரமான விதைகளைப் பயன்படுத்தினால் மட்டுமே விதைகள் சீராக முளைத்து தேவையான பயிர் எண்ணிக்கை, சீரான பயிர் வளர்ச்சி, கலப்பிடமில்லாத பயிர் மற்றும் ஒரே நேரத்தில் அறுவடைக்கு வந்து அதிக மகசூல் கிடைப்பதுடன் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும்.

தரமான விதை என்பது நல்ல முளைப்புத்திறன், சுத்தத் தன்மை, பிறரகக்கலவன் இன்றி இருத்தல் மற்றும் நிர்ணயிக்கப் பட்ட ஈரப்பதம் இருக்கும் விதையாகும். விதையின் புறத்தூய்மை என்பது பயிர் விதையைத் தவிர பிற பயிர் விதைகள், களை விதைகள் மற்றும் இதர தேவையற்ற பொருட்களின் கலப்பு இல்லாமல் இருத்தல் வேண்டும். புறத்தூய்மையானது பயிருக்குத் தகுந்தவாறு 96% முதல் 98% வரை இருக்க வேண்டும்.

நல்ல முளைப்புத்திறன் உள்ள விதைகளே சீராக வளர்ந்து சிறப்பான மகசூல் தரும். நிர்ணயிக்கப்பட்ட முளைப்புத்திறன் நெல்லுக்கு 80%, மக்காச்சோளம் 90%, சோளம், கம்பு மற்றும் சிறுதானிய பயிர்களுக்கு 75%, பயறு வகைகளுக்கு 75%, வெண்டைக்கு 65% , கத்தரி, தக்காளி, நிலக்கடலை 70%, மிளகாய் 60%, மற்றும் எள் 80% இருந்தால் மட்டுமே போதிய பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு அதிக மகசூல் கிடைக்கும்.

நிர்ணயிக்கப்பட்ட ஈரப்பதம் இருந்தால் மட்டுமே நல்ல முளைப்புத்திறன், சீரான வளர்ச்சி மற்றும் நல்ல விளைச்சல் இருக்கும். விதையின் ஈரப்பதம் பயிருக்கு தகுந்தவாறு 7% முதல் 13% வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கு கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ ஈரப்பதம் இருந்தால் விதையின் ஆயுட்காலம் மற்றும் முளைப்புத்திறன் குறைந்து விடும். சரியான ஈரப்பதத்தில் உள்ள விதைகளையே பூச்சி நோய் தாக்குதலின்றி நீண்ட நாட்கள் சேமித்து வைக்கலாம்.

விவசாயிகள் தாங்கள் உபயோகிக்கும் விதை மற்றும் விதை விநியோகிஸ்தர்கள் தாங்கள் விநியோகிக்கும் விதைகளின்

தரத்தினை அறிய சிவகங்கை தொண்டி ரோட்டில் ஒழுங்கு முறை விற்பனைக்கூட வளாகத்தில் அமைந்துள்ள அரசு விதை பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரியினை கொடுத்து ரூ.80/- கட்டணம் செலுத்தினால், அவ்விதை பரிசோதனை செய்யப்பட்டு விதையின் தரம் குறித்த அறிக்கை வழங்கப்படும் என சிவகங்கை விதைப் பரிசோதனை அலுவலர் ம.மகா லெட்சுமி மற்றும் வேளாண் அலுவலர் அ.லயோலா அன்புக் கரசி தெரிவித்துள்ளனர்.

# முகக் கவசம் உயிர்க் கவசம்




# வேளாண்மை அன்றும் இன்றும் எப்படி இருக்கு?

வேளாண்மை தமிழக விவசாயிகளின் உயிர்நாடி. அன்றைய காலத்திலே கிராமங்கள் செழிப்பாக சகோதரத்துவடன் சந்தோ-மாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்ந்து வந்தனர். பத்தாம் பசலியாக உண்மை நேர்மை, நீதிக்கு கட்டுப்பட்டு வாழந்தனர். அவர்களின் உயிர் மூச்சாக வேளாண்மையும் கால்நடைகளும் தான் இருந்தது. கிராமங்களில் குளக்கரை கண்மாய் கரை ஓரங்களில் உள்ள புளிய மரம் வேப்ப மரத்தின் அடியில் மாலையில் உட்கார்ந்து விவசாய வேலை சம்மந்தப்பட்ட தகவல்களை பரிமாறி கொண்டனர்.

அந்த காலத்தில் இரசாயன உர பயன்பாடு கிடையாது. ஆடு மாடுகளின் சாணமே அடியுரமாக இருந்தது, விதைப்பிற்கு காண விதைகளை தாங்களே வைத்திருந்தனர், நாட்டு விதை களாக இருந்தது. சில சமயங்களில் அந்த கிராமங்களிலேயே விதைகளை பரிமாற்றம் செய்து கொண்டனர். ஒவ்வொரு குடும்பத்திலும் 10-15 ஆட்கள் இருந்ததால் அவர்களது சாகுபடிக்கான பணியை கூலியாட்கள் இல்லாமே செய்து தங்களுடைய உணவுதேவைக்கான தானியங்களை (நெல் சிறுதானியங்கள்) உற்பத்தி செய்தனர். தங்களுடைய தேவை யான பொருட்களை பணத்திற்கு பதிலாக தானியங்களை கொடுத்து பண்ட மாற்று அடிப்படையில் வாழ்ந்தனர். அவர் களுக்கு விவசாயத்திற்கு பெரிதும் உதவியது ஆடு, மாடுகள் தான். அவசர பணத்தேவைகளை கூட அவற்றை விற்பனை செய்தனர். அது அவர்களுக்கு நடமாடும் தங்க கட்டி போல அன்றைய தினத்தில் இருந்தது.

## இன்றைய நிலையில் வேளாண்மை

இன்று கிராமங்கள் தன்னுடைய வடிவத்தை இழுந்து களையிழந்த நிலை தான். ஊரில் பாதிக்கு மேல் மக்கள் தங்கள் தொழில் நிமித்தம், குழந்தைகளின் கல்விக்காக நகர்ப் புறத்தில் தான் உள்ளனர். இன்றைய காலத்தில் களகளவென கிராமங்கள் சத்தமின்றி பாதிக்கு மேல் பூட்டப்பட்ட வீடுகளுடன் காட்சியளிக்கிறது. உழவு போட மாடுகள் இல்லை, பதிலாக டிராக்டர் போன்ற உழவு கருவிகள் உள்ளன.

மழை வந்ததும் விதைகளை விதைக்க நகர்ப்புறங்களில தேடித்தான் வாங்கி விதைக்கின்றனர். தன்னுடைய விதை வங்கி இன்று காலியாக உள்ளது.

விதைக்காக அடுத்தவரிடம் கையேந்த வேண்டிய நிலை தான். பூச்சிகளை கட்டுப்படுத்த அடுப்பு சாம்பல் இல்லை. மூலிகை பூச்சி விரட்டிகளை தயாரிக்க தேவைக்கேற்ப செடிகள் இல்லை.

கண்ட கண்ட பூச்சி மருந்தை தெளிப்பதிலும் களைகளை கட்டுப்படுத்த அதிக விசமாக உள்ள மருந்தை பயன்படுத்து கின்றன.

அன்றைய தினத்தில் ஊர் கட்டுபாடு கிராம காவல் இருந்தது. காடுகளில் உள்ள மரங்கள் (பனை, வேம்பு, புளி ) போன்ற மரங்கள் பாதுகாப்பாக இருந்தது. இன்று மரங்களால் அடுத்த காட்டுகார்களிடம் சண்டை மரங்கள் வெட்ட பட்ட நிலை தான்.

அன்றைய காலத்துல அறுவடை நாட்கள் திருவிழா போல கொண்டாடினார்கள். வேளையாட்களுக்கு உணவு வழங்கப் பட்டது. இன்று மெஷின் அறுவடை, சப்தமில்லாத அறுவடை.

அன்றைய காலத்திலே கிராமங்களின் வாழ்வாதாரமாக விவசாயம் இருந்தது. இன்று அப்படி அல்லாமல் செகன்டரி யாக மாறி விட்டது. இன்னும் சொல்ல போனாலும் இதே நிலை நீடித்தால் வேளாண்மை படிப்படியாக குறையும்.

காந்திஜி கண்ட இராமராஜ்யம் கிராமப்புறங்களில் மலர வேண்டும். மக்கள் நகர்ப்புறங்களை நோக்கி செல்லுவதை தடுக்க கிராமங்களில் நகர்ப்புறங்களில் உள்ள வசதியை ஏற்படுத்தி மக்களை அங்கேயே தங்க வைக்க வேண்டும். அப்போது தான் முழுமையான விவசாயம் கிராமப்புறங்களில் மலரும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தலைக் கவசம் உயிர்க் கவசம் முறையாக தலைக் கவசம் அணிவோம்


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# மானாவாரி மா, தென்னை வயல்களில் ஊடுபயிராக கொள்ளு சாகுபடி செய்ய வேண்டும்

கிருஷ்ணகிரி, அக்.28

கிருஷ்ணகிரி வட்டாரம், இட்டிக்கல் அகரம் கிராமத்தில் நெற்பயிர் சாகுபடி செய்வதில் பின்பற்ற வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இது குறித்து கிருஷ்ணகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சுரேஷ்குமார் தெரிவித்து உள்ளதாவது, பயிற்சியில் விவசாயிகள் பயிர் பாதுகாப்பு மருந்து களான சூடோமோனாஸ், டி.விரிடி பயன்படுத்தி விதைக்கும் முன் நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதனால் வேரழுகல், பாக்டீரியல் இலை கருகல் நோய்களில் இருந்து நெற்பயிர் காப்பாற்றலாம் என்றார். இந்த பயிற்சியில் எலுமிச்சங்கிரி வேளாண் அறிவியல் மையத்தின் மண்ணியல் துறை வல்லுநர் உதயன் விவசாயிகளிடம் மண்ணின் வளத்தை பெருக்க வேண்டும் எனவும், அதற்கு நெல் பயிரிடும் முன்னதாக பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு. சணப்பு விதைகளில் ஏதேனும் ஒன்றை ஏக்கருக்கு 10-15 கிலோ வரை விதைத்து பின் அவை வளர்ந்தவுடன் பாதி செடிகள் பூ எடுத்தவுடன் மடக்கி உழுது விடவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் சுமார் 8 முதல் 10 டன் அளவிலான பசுந்தாள் உரம் நிலத்திற்கு குறைந்த செலவில் இட இயலும் என்றார்.

நுண்ணுயிர் உரம், நுண்ணூட்ட உரம் போன்றவற்றை 50 சதவீத மானியத்தில் வேளாண் விரிவாக்க மையத்தில் கிடைக்கும் எனவும், அனைத்து விவசாயிகளும் இந்த பருவத்தில் நுண்ணூட்டச்சத்து அவசியம் இட வேண்டும் எனவும் கூறினார். பின்னர் விவசாயி களை வயலுக்கு அழைத்துச் சென்று வயலில் நன்மை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகள் குறித்து விளக்கமளித்தார். பயிற்சியில் வேளாண்மை அலுவலர் பிரியா விவசாயிகளிடம் அரசு வழங்கும் மானியத்திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார். பின்னர் தற்போது கிருஷ்ணகிரி வட்டாரத்தில் மழை பரவலாக பெறப்பட்டு உள்ளது. இதனை பயன்படுத்தி மானாவரியில் கரம்பாக உள்ள அனைத்து நிலங்களிலும் மற்றும் தென்னை தோப்புகள், மாந் தோப்புகளில் ஊடுபயிராக இம்மாவட்டத்தின் சிறப்பு பயிரான உளுவல் எனப்படும் கொள்ளு விதைப்பினை அவசியம் மேற் கொள்ள வேண்டும் என்றார். இவ்வாறு விதைப்பதின் மூலம், மண்ணில் சத்துக்கள் நிலை நிறுத்தப்படுகின்றது, மண் அரிப்பு தடுக்கப்படுகின்றது. அடுத்த பருவத்தில் மா மற்றும் தென்னையில் அதிக பூ பிடிக்கும், குரும்பை உதிர்வதை தடுக்கும். எனவே, கூடுதல் மகசூல் பெறலாம். களைகள் மற்றும் பூச்சி நோய்கள் அதிகம் தாக்குதல் ஏற்படுவதில் இருந்து குறைந்த செலவில் கட்டுப்படுத்தலாம் என்றார்.

எனவே, இந்த எளிய தொழில் நுட்பத்தினை பின்பற்றி அனைவரும் பயன்பெற வேண்டும் என்றார். பயிற்சியின் நிறைவில் நன்றியுரை கூறிய உதவி வேளாண்மை அலுவலர் முத்துசாமி அனைத்து விவசாயிகளும் இயற்கை விவசாயம் செய்ய வேண்டும் என்றும் வேளாண் இடுபொருட்கள் பெற வரும் போது கட்டாயம் ஆதார் எண், சிட்டா எண் உடன் ஏ.டி.எம் கார்டு கொண்டு வர வேண்டும் என்றார்.பண்ணைப்பள்ளி பயிற்சிக்கு தேவையான ஏற்பாடுகளை விவசாயி திருப்பதி மற்றும் அட்மா திட்ட அலுவலர் சண்முகம் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.




# குங்குமப்பூ பண்ணை-ஓர் பார்வை



ஹரியானாவில், சகோதரர்கள் நவீன் மற்றும் பிரவீன் சிந்து ஆகியோர் 225 சதுர அடி அறையை வெற்றிகரமான குங்குமப்பூ பண்ணையாக மாற்றி உள்ளனர். உலகின் விலையுயர்ந்த மசாலாப் பொருளை கிலோ 5 லட்சத்திற்கு விற்றுள்ளனர். பிரவீன் தான் எம்டெக் படிக்கும் போது, உட்புற குங்குமப்பூ விவசாயத்தைப் பற்றி படித்த போது அவர்களின் பயணம் தொடங்கியது.

தாய்லாந்தில் பயிற்சி பெற்று, காஷ்மீர் மாநிலம் பாம்போருக்குச் சென்று, வீட்டில் குங்குமப்பூவை வளர்க்க முடிவு செய்தனர். 2018 ஆம் ஆண்டில், ஏரோபோனிக்ஸைப் பயன்படுத்தி, இந்த நோக்கத்திற்காக தங்கள் கூரையில் பயன்படுத்தப்படாத அறையை மாற்றினர். இது தாவரங்கள் காற்றில் அல்லது மண் இல்லாமல் மூடுபனியில் வளர அனுமதிக்கிறது. காஷ்மீரில் இருந்து குங்குமப் பூவை வாங்கி, ஆய்வகத்தை அமைக்க சுமார் ரூ.6 லட்சம் முதலீடு செய்தனர். பழுதடைந்த விதைகளால் ஆரம்பத்தில் பின்னடைவு ஏற்பட்டாலும், விடாமுயற்சியுடன் ஒரே பருவத்தில் 2 கிலோ குங்குமப்பூவை வெற்றிகரமாக அறுவடை செய்து ரூ.10 லட்சம் சம்பாதித்தனர். வெப்பநிலை கட்டுப்பாடு, ஈரப்பதம் மற்றும் விளக்கு களை வளர்ப்பதன் மூலம் சகோதரர்கள் வளரும் நிலைமைகளை கவனமாக நிர்வகிக்கிறார்கள். ஆகஸ்ட் மாதத்தில் குங்குமப்பூவை நடவு செய்து, நவம்பரில் பூக்களை அறுவடை செய்கின்றனர். அறுவடைக்குப் பிறகு, அவர்கள் எதிர்கால நடவுக்காக மீண்டும் பல்புகளைப் பயன்படுத்தலாம், செலவுகளை கணிசமாகக் குறைக் கலாம். அவர்களின் பிராண்ட், அமரத்வா, உள்நாட்டு சந்தையை மட்டுமல்ல, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடு களுக்கும் ஏற்றுமதி செய்கிறது. பருவம் இல்லாத காலங்களில் காளான்களைக் கொண்டு விவசாயத்தை பன்முகப்படுத்துவதன் மூலம், அவர்கள் தொடர்ந்து தங்கள் வருவாயை அதிகரிக்கிறார்கள்.

தகவல் : டாக்டர் ஆதர்சா கவுடா தொழில்முனைவு மற்றும் ஆலோசனையின் தலைவர், உணவு அறிவியல் துறை, உணவு பதப்படுத்துதல் துறை, செயின்ட் அலோசியஸ் (பல்கலைக்கழக மாகக் கருதப்பட்டது) மங்களூரு, கர்நாடகா, இந்தியா.

தமிழாக்கம் : சுரேஷ்குமார், கோவில்பட்டி. 94436 20932.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# இறைச்சியைப் பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள்

நேற்றைய தொடர்ச்சி...

## உறை உலர் பதப்படுத்தும் முறை

உறை உலர் பதப்படுத்தும் முறையில் இறைச்சியில் உள்ள நீர் முழுவதும் -40 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் உறைய வைத்துப் பின்பு உறைந்த இறைச்சியைக் காற்றில்லா வெற்றிடத்தில் 9 முதல் 12 மணி நேரம் வரை உலர வைக்க வேண்டும். அப்பொழுது இறைச்சியில் உள்ள 94 விழுக்காடு நீர் ஆவியாகிறது. அதனால் உறை உலர் பதப்படுத்தும் முறையில் இறைச்சியானது, தேனீக்கூண்டு போன்று வடிவமைப்பைப் பெற்றுள்ளதை நுண்ணோக்கி மூலம் காண இயலும். இவ்வாறு பதப்படுத்திய இறைச்சியை சமைப்பதற்கு முன்பாக நீரில் மூழ்க வைத்தால் இறைச்சி மீண்டும் அதன் இயல்பான நிலையை எந்தச் சத்துகளையும் இழக்காமல் அடைந்துவிடும். இவ்வாறு பதப்படுத்தப்பட்ட இறைச்சியானது, பல ஆண்டுகள் வரை கெடாமல் பாதுகாக்க இயலும்.

## உப்பிலிடப்பட்டு, புகையூட்டிப் பதப்படுத்தும் முறை

உப்பிலிடப்பட்ட இறைச்சிப் பொருளானது, எலும்பு நீக்கப்பட்ட இறைச்சியில் உப்பு, சர்க்கரை மற்றும் சோடியம் நைட்ரேட் கலவையைச் சேர்த்து தயாரிக்கப்படுகிறது. பின்பு குளிர்சாதன பெட்டியில் இருப்பு வைத்துக்கூடப் பயன்படுத்தலாம். இவ்வாறாக பன்றியின் தொடைப் பகுதியிலிருந்து சுவைமிகுந்த ஹேம் மற்றும் பன்றியின் மார்புப் பகுதியிலிருந்து அனைவராலும் விரும்பக்கூடிய பேக்கன் போன்றவைகள் தயாரிக்கப்படுகின்றன. இங்ஙனம் உப்பிலிடப்பட்ட இறைச்சிப் பொருளை புகையூட்டியில் வைத்து புகையூட்டப்பட்டு தயாரிக்கப்படுகிறது. முற்காலத்தில் புகையூட்டுவதற்கு மரத்தூளைப் பயன்படுத்தினர். ஏனென்றால் மரத்தூள் புகையிலிருந்து வரும் சில வேதிப்பொருள்கள், நுண்ணுயிர்களைக் கொல்வதோடு மட்டுமல்லாமல், அவைகளின் வளர்ச்சியையும் கட்டுப்படுத்தி இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களின் வைப்புக் காலத்தையும் நீட்டிக்கின்றன. மேலும், இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களுக்கு நுகர்வோர்கள் விரும்பக்கூடிய மணத்தையும் சுவையையும் தருகின்றன. தற்காலத்தில் திரவப் புகை இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்கள் புகையூட்டப் பயன்படுத்தப் படுகின்றன.

### உறையில் அடைத்து வைத்துப் பதப்படுத்தும் முறை

இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்கள் நுண்ணுயிர்கள் தாக்கத்தினாலும், ஆக்ஸிஜனேற்ற வேதி வினைகளினாலும் விரைவிலேயே கெட்டுப்போய்விடும். எனவே அவைகள் உற்பத்தி செய்யப்படுவதிலிருந்து, நுகர்வோரைச் சென்றடையும் வரைப் பாதுகாப்பாக வைத்து இருப்பதோடு மட்டுமல்லாமல், அதேசமயம் அவைகளின் தரமும் காக்கப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களை குளிர்நிலை அறையில் 4 டிகிரி செல்சியஸ் குளிர்பதன நிலையிலும், -18 டிகிரி செல்சியஸ் உறை நிலையிலும் பதப்படுத்திப் பாதுகாப்பாகச் சேமித்து வைக்க பையகப்படுத்தி வைப்பதே சாலச் சிறந்த முறையாகும். இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களைப் பையகப்படுத்தி வைப்பதன் மூலம் மாசு, தூசுத் துகள்கள், வேதிப் பொருள்கள் மற்றும் நுண்ணுயிர்களின் தாக்கம் இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களில் ஏற்படாத வண்ணம் பாதுகாக்கப்படுகிறது. இதனால் இறைச்சியின் வைப்புக் காலம் நீட்டிக்கப்படுகிறது. இங்ஙனம் இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களைப் பையகப்படுத்தி வைப்பதன் மூலம், நுண்ணுயிர்களின் அளவும் குறைவாக இருக்கும். தற்பொழுதுள்ள நவீன யுகத்தில் நுகர்வோர்களைக் கவரும் விதத்தில் பொதியரையில் இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களின் விவரம், சமைக்கும் முறைகள், பாதுகாக்கும் முறைகள், அவைகள் உற்பத்தி செய்யபபட்டதேதி மற்றும் வைப்புக் காலம் போன்ற நுகர்வோர்களுக்குத் தேவையான பலவிதமான தகவல்களும் அச்சடிக்கப்பட்டிருப்பதால் இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களின் மீது நுகர்வோர்களின் நம்பிக்கை அதிகரிப்பதால், இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களின் விற்பனையும் பன் மடங்கு அதிகரிக்கிறது.

### வெப்பமிடுதல்

இறைச்சிப் பொருள்களை அதிக வெப்பத்திற்கு உட்படுத்தும் பொழுது, இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களைக் கெடச் செய்யும் நுண்மங்களும் அவைகளின் நுண்ம கருவணுக்களும் அழிக்கப்படுகின்றன. வெப்பமிடும் முறையில் இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களை டப்பாக்களில் காற்றுப் புகாதவாறு அடைத்து அதிக வெப்பத்திற்கு உட்படுத்தி பதப்படுத்திப் பாதுகாக்கப் படுகிறது. இங்ஙனம் அதிகவெப்பத்திற்கு உட்படுத்தி பதப்படுத்திப் பாதுகாக்கப்பட்ட இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களைக் குளிர்சாதன வசதியில்லாமல் அறை வெப்பநிலையிலேயே நீண்ட நாள்கள் அதாவது, ஒன்றரை முதல் இரண்டு ஆண்டுகள் இருப்பு செய்து,தேவையான பொழுதுப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**கதிர் வீச்சினால் பதப்படுத்தும் முறை**

இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களைப் பதப்படுத்தக் காமா கதிர்களையே அதிகம் பயன்படுத்துகின்றனர். ஏனென்றால் காமா கதிர்களே மிக ஆழமாக ஊடுருவி நுண்ணுயிர்கள் வளராமல் அழிக்கவல்லவை. இந்தப் பதப்படுத்தும் முறை மூலம் இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களின் மணம், இழையமைப்பு அவைகளிலுள்ள ஊட்டச் சத்துகளும் தக்க வைக்கப்படுகின்றன. ஆனால் கதிர் வீச்சினால் பதப்படுத்தும் முறையில் செலவு மிக அதிகமாகும். மேலும் உலக ஆரோக்கிய கூட்டமைப்பு, இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களில் அதிகபட்சமாக 1 மெகாராட் அளவு ஒளிப்பிரக்கம் செய்யப்பட்டு உட்கொள்ளலாம் எனப் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களை மேற் சொல்லப்பட்ட பதப்படுத்துதல் முறைகள் மூலம் அவைகளின் வைப்பக் காலத்தை நீட்டிப்பதோடு மட்டுமல்லாமல் நுண்ணுயிர் களின் வளர்ச்சியையும், பெருக்கத்தையும் கட்டுப்படுத்தி பாதுகாப் பான, தரமான, சுவையான ஊட்டச்சத்துமிக்க இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்களை நுகர்வோர்களுக்கு வழங்கி மகிழலாம்.

தகவல் : **மூ.சுதா, இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத்துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி.**

**முற்றும்.**



# தென்னையில் ரூகோஸ் வெள்ளை ஈ மற்றும் காண்டாமிருக வண்டு கட்டுப்பாடு



சேலம், அக்.28

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் தென்னையில் ரூகோஸ் வெள்ளை ஈ மற்றும் காண்டா மிருக வண்டு கட்டுப்பாடு குறித்த செயல்விளக்க இடு பொருட்கள் 15 பயனாளிகளுக்கும், மலர்களில் அறுவடை பாதுகாப்பு கிட் செயல்விளக்க இடுபொருட்கள் 5 பயனாளி களுக்கும் வழங்கப் பட்டது.




இனாம் பைரோஜி, பெருமாம்பட்டி, ராக்கிப்பட்டி, எட்டி மாணிக்கம்பட்டி பூலாவரி ஆகிய கிராமங்களில் உள்ள பயனாளிகளின் வயல்களுக்கு சென்று தென்னையில் மஞ்சள் ஒட்டு பொறி, பக்கெட் பொறி, ரைனோசிரஸ் கவர்ச்சி பொறி, சிவப்பு கூன் வண்டு கவர்ச்சி பொறி ஆகிய இடுபொருட்களை பாதுகாப்பாக பயன்படுத்தி வெள்ளை ஈ , காண்டாமிருக வண்டு மற்றும் சிவப்பு கூன் வண்டு கட்டுபடுத்துவது குறித்த செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. மேலும் மலர்கள் மற்றும் வெண்டை பயிர்களில் பாதுகாப்பாக அறுவடை செய்ய கையுறைகள், அறுவடை கத்திகள் ஆகிய இடுபொருட்களை பாதுகாப்பாக பயன்படுத்துவது குறித்த செயல்விளக்கமும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி ஆகியோரால் செய்து காண்பிக்கப்பட்டது என்று வேளாண்மை உதவி இயக்குனர் பா.கார்த்திகாயினி ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# துவரை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறும் தொழில்நுட்பம்

கிருஷ்ணகிரி, அக்.28

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டாரத்தில் பரவலாக துவரை சாகுபடி நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக தளி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.முருகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தளி வட்டாரத்தில் காரீப் மற்றும் இராபி பருவ சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது. துவரை செடிகள் தற்பொழுது பூக்கும் தருவாயில் உள்ளதால் சாகுபடியில் கூடுதல் மகசூல் பெற 2 சதவீதம் டி.ஏ.பி கரைசல் தெளித்து, உற்பத்தியை பெருக்கலாம் மற்றும் டி.ஏ.பி கரைசல்




20 கி/லிஅல்லது யூரியா 20 கி/லி பூக்கும் தருவாயில் இலைத் தெளிப்பானாக அளிக்க வேண்டும். மேலும் 15 நாட்கள் இடைவெளியில் இலைத் தெளிப்பானகவும் அளிக்க வேண்டும்.

மேலும் பூ பூக்க தொடங்கும் பருவத்தில் ஏக்கருக்கு 2 கிலோ தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பயறு வொண்டரை 200 லிட்டர் நீரில் ஒட்டும் பசையுடன் கலந்து தெளிக்கும் போது பூ உதிர்வது குறைந்து அதிக மகசூல் கிடைக்கும் மற்றும் வறட்சியை வளரும். இவ்வாறு தெளிப்பதன் மூலம் பூ உதிர்வதை தடுத்து, அதிக காய்கள் பிடிப்பதை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல் மகசூல் அதிகரித்து விவசாயிகளுக்கு அதிக வருமானத்தையும் ஈட்டி தருகிறது. எனவே விவசாயிகள் அனைவரும் 2 சதவீத டி.ஏ.பி கரைசலை பயன்படுத்தி அதிக மகசூலை பெறுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com